1993 மார்ச் 16]

தொழிற்கூடங்களை மூடிவிட்டுள்ளன. அதில் வேலை செய்தவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை. எனவே, மூடிய தொழிற் கூடங்களைத் திறக்கவும், அங்கே வேலை செய்தவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தோல் பொருள் வளர்ச்சி நிறுவனத்தின் கீழ் காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி வளர்ச்சிக்காக பெரம்பூரிலும். பல்லாவரத்திலும் இரண்டு தோல் பொருட்கள் உற்பத்தி நிலையங்கள் இயங்கி வருகின்றன. அதேபோல தமிழகத்தில் சென்னை மண்டலம், கோவை மண்டலம் மற்றும் மதுரை மண்டலம் ஆகியவற்றில் 10 தோல் பொருட்கள் உற்பத்தி நிலையங்கள் இயங்கி வருகின்றன. உற்பத்தி நிலையங்கள் எவையும் மூடப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) குறுகியகால வினா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகிய கால வினா, திரு. இரா. அப்பு நடேசன், இருக்கையில் இல்லை.

1--

தமிழகத்தில் வசூலிக்கப்படும் பேருந்துக் கட்டணம்

* *19409*–**திரு. இரா. அப்பு நடேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) பிற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் தமிழ்நாட்டில்தான் அதிகமான கட்டணம் அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் வசூலிக்கப்படுகின்றதா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1993 மார்ச் 16

(ஆ) ஆம் எனில், தமிழகத்தில் வசூலிக்கப்படும் பேருந்துக்கட்டணம் கி.மீ.-க்கு எவ்வளவு அதிகம்?

(இ) கடந்த நிதியாண்டில் மட்டும் டீசல் விலை உயர்வு எவ்வளவு என்பதையும் இதனால் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பையும் அரசு அறிவிக்குமா?

திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(இ) 15-9-92 அன்று டீசல் விலை கிலோ லிட்டருக்கு ரூ. 5,648.87-ல் இருந்து ரூ. 6,837.41-க்கு உயர்த்தப்பட்டது. இதனால் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு 15 செப்டம்பரில் இருந்து நடப்பு நிதியாண்டு முடியும் வரை ரூ. 33 கோடி அதிகமாக செலவாகும். ஒரு முழு ஆண்டுக்கு இந்தச் சுமை ரூ. 57 கோடியாக இருக்கும், இதையொட்டி ஏற்பட்ட டயர் விலையேற்றத்தின் காரணமாக 15-9-92 முதல் மார்ச் 93 முடிய ரூ. 2.43 கோடியும், ஒரு முழு ஆண்டுக்கு ரூ. 4.16 கோடியும் அதிமாக செலவாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. உயிர் மீட்புப் பணிக்காக அம்பாசமுத்திரம் உலகநாதனுக்கு சன்மானம் அளித்ததற்காக முதலமைச்சருக்குப் பாராட்டும் நன்றியும் தெரிவித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில மாதங்களுக்கு முன்பாக தென் மாவட்டங்களில் ஏற்பட்ட கடும் புயலாலும், வெள்ளத்தாலும் பல உயிர்கள் தமிழகத்திலே இறந்தன. அந்த நேரத்தில் நம்முடைய தமிழகத்தின் முதலமைச்சர்